# தந்தி


இல: 1076 | 1970 ஜூலை 8 புதன்கிழமை ★ | விலை சதம் 5


University of Jaffna Sri Lanka
RECEIVED
Periodicals Division
Library

## லஞ்சக் கமிஷனர் திணைக்களம் விசாரணை

# அரசியல்வாதிகள் மீது லஞ்சக் குற்றச்சாட்டு

தண்ணீரில் குதிப்பதற்கு முன் இந்த அழகி காமிரா வுக்குள் அகப்பட்டுக் கொண்டார். அண்மையில் நடை பெற்ற நீச்சல் போட்டி ஒன்றின்போது இப்படம் எடுக்கப் பட்டது.



**கடந்த ஐந்து வருட காலத்துக்குள், லஞ்சக் குற்றங்களில் ஈடுபட்ட 12 அரசியல்வாதிகள் மீது அதி விரைவில் குற்றச்சாட்டு தாக்கல் செய்யப்படும்.**

லஞ்சக் கமிஷனர் திணைக் களத்தினல் இதற்கான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

இந்த 12 பேர் பற்றியும் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இம்முறைப்பாடுகள் பற்றி இப்போது ஆராயப்பட்டு வருகிறது. அதிவிரைவில் இது பற்றிய விசாரணைகள் முடிவடையும் என லஞ்சக் கமிஷனர் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் கூறினர்.

இந்த 12 பேரில் பலர் லஞ்சமாக பணம் பெறவில்லை என்றும் வேறு வழிகளில் பயன் பெற்றுள்ளனர் என்றும் இதுவரை நடைபெற்ற விசாரணைகளில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ல)

## பொலீஸ் பயிற்சி மீண்டும் கட்டுகுருந்தையில்

தற்சமயம் கொழும்பில் உள்ள பொலீஸ் பயிற்சிக் கல்லூரியை மீண்டும் கட்டுகுருந்தைக்கு மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. (ல)

## ‘பொயின்ட் கன்ட்ரோலர்’ ஆர்ப்பாட்டம் செய்ய முயற்சி?

முன்னைய அரசாங்கத்தால் இ. போ. ச.வுக்கு நியமிக்கப்பட்ட “பொயின்ட் கன்ட்ரோலர்கள்” எனப்படும் முனைக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் ஆர்ப்பாட்டம் செய்யப் போகிறார்கள் என்பதைக் கேள்வியுற்று கொழும்பிலும் சுற்றியுள்ள இடங்களிலும் உள்ள பெருந்தொகையான இ. போ. ச. ஊழியர்கள் நேற்று மாலை இ. போ. ச. தலைமைக் காரியாலயத்தைச் சுற்றிக் கூடினர்.

“பொயின்ட் கன்ட்ரோலர்” களுக்கு இ. போ. ச. வேலை நீக்க உத்தரவு வழங்கியிருப்பது தெரிந்ததே.

இ. போ. ச. தலைமைக் காரியாலயத்துக்கு நேற்று வந்த இரண்டு பொயின்ட் கன்ட்ரோலர்களை இ. போ. ச. ஊழியர்கள்சிலர் தாக்க முயன்றதாகவும் பொலீஸார் அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெறாமல் தடுத்ததாகவும் கூறப்படுகிறது.

பொயின்ட் கன்ட்ரோலர்கள் சேவை அவசியமற்றதால் 283 பொயின்ட் கன்ட்ரோலர்களுக்கு வேலை நீக்க உத்தரவு வழங்கப் பட்டு உள்ளதாக இ. போ. ச. தலைவர் திரு. அனில் முனசிங்கா கூறினர். ஆனல் இவர்களுக்கு அதி விரைவில் வேறு வேலை வழங்க தான் முயற்சிப்பதாகவும் திரு. முனசிங்கா சொன்னர்.

வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் நேற்றுக் காலை இ. போ. ச. தலைமைக் காரியாலயத்துக்கு வந்து திரு. முனசிங்காவைச் சந்தித்துப் பேச வேண்டும் எனக் கோரினர். இவர்கள் சார்பாக ஒரு தூதுகோஷ்டி வந்தால் பிற்பகலில் தான் அத்தூதுகோஷ்டியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாக திரு. முனசிங்கா தெரிவித்தார்.

பிற்பகலில் மீண்டும் வந்த இவ்வூழியர்கள், இ. போ. ச. தலைமைக் காரியாலயத்துக்கு முன் கூட்டம் நடத்தப் போவதாகவும் ஆர்ப்பாட்டம் செய்யப் போவதாகவும் பயமுறுத்தினர்.

இவர்களின் இந்நடவடிக்கையினல் கோபம் அடைந்த பிரதேச வாசிகள் இவர்களை அங்கிருந்து விரட்டினர். (ல)

## ஆசிரியர்களுக்கு எதிரான

# முறைப்பாடுகளை விசாரிக்க புதியபிரிவு அமைக்கப்படும்

ஆசிரியர்களுக்கு எதிராக செய்யப்படும் முறைப்பாடுகளைப் பற்றி விசாரிப்பதற்கு கல்வி அமைச்சில் புறம்பான பிரிவு ஒன்றை ஏற்படுத்த கல்வி மந்திரி அல்ஹாஜ் பதியுதின் மஹ்மூத் தீர்மானித்துள்ளார்.

செப்டம்பர் மாதத்தில் இருந்து இப்புதிய பிரிவை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொது மக்களிடம் இருந்து ஆசிரியர்களுக்கு எதிராக செய்யப்படும் முறைப்பாடுகள் ஒழுங்காகக் கவனிக்கப்படுவதில்லை என்றும் கடந்த 5 வருட காலமாக இவ்விஷயத்தில் முறையான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்றும் கல்வி மந்திரி கூறியுள்ளார்.

புதிய பிரிவு ஏற்படுத்தப்பட்ட பின் இத்தகைய முறைப்பாடுகள் பற்றி உடன் விசாரிக்கப்படும். (ல)

## மீனாட்சி



என்னடீ, கண்டியில் துவரம் பருப்பு ராத்தல் அறுபது சதத்திற்கு விற்கிறார்களாமே!

ஆமாங்க, அங்கே டி. ஆர். பி-காரர் இல்லைப் போலும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புது வருட தினத்தன்று வீட்டுக்குப் போய்

# மாமியார் மீது மருமகன் குற்றம் புரிந்தாராம்!

### ஜீவனும்ச வழக்கில் வழக்கறிஞர் வர்ணனை

"மனுதார், எதிர்மனுதாரின் மாமியார் ஆவார். புதுவருட தினத்தன்று மாமியார் வீட்டுக்குப் போன எதிர்மனுதார், மனுதாரை ஒரு மூலைக்கு இழுத்துச் சென்று, பலாத்காரம் பிரயோகித்துள்ளார். அந்தச் சமயத்தில், மனுதாரின் பெற்ருேர் வயலில் வேலை செய்து கொண்டிருந்தனர்".

மத்துகம மாஜிஸ்திரேட் திரு. நிசங்கா வீரரத்தின முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஜீவனும்ச வழக்கில், வழக்கறிஞர் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

இந்த வழக்கில், கிட்டப்பன என்ற இடத்தைச் சேர்ந்த வி. டி. குசுமாவதி என்ற பெண், தனது மருமகனும், அதே கிராமத்தைச் சேர்ந்தவருமான ஆர். ஏ. புண்ணியசிறி என்பவரிடமிருந்து தனக்கும் தனது குழந்தைக்கும் ஜீவனும்சம் பெற்றுத் தருமாறு கோரி மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

எதிர் மனுதார் தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் கூறியதாவது:—

"புதுவருட தினத்தன்று, இந்தச் சம்பவம் நடைபெற்றபொழுது, தனது பெற்ருேர் வயலில் வேலை செய்து கொண்டிருந்ததாக மனுதார் நீதிமன்றத்தில் கூறியிருக்கிருர். சிங்கள பௌத்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், புதுவருட தினத்தன்று மத சம்பந்தமான கருமங்களைத் தவிர வேறு வேலைகளில் ஈடுபடக்கூடாது என்பது பாரம்பரிய வழக்கமாக இருக்கையில், மனுதாரின் பெற்ருேர் புதுவருட தினத்தன்று வயலில் வேலை செய்தார்கள் என்று மனுதார் கூறுவது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல.

"ஆயினும், பெற்ருேர் திரும்பியவுடன் இந்தச் சம்பவம் பற்றி மனுதார் முறையிட்டதாகவும்; உடனடியாக அவரது தந்தை வெலிப்பன பொலீஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்ததாகவும் மனுதார் நீதிமன்றத்தில் கூறியுள்ளார். ஆனல், அன்றையதினம் அப்படி ஒரு முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதாகப் பொலீஸ் நிலையத்தில் ஆதாரம் இல்லை"

மாஜிஸ்திரேட் :– "அப்படியானல், அந்தப் பெண்ணின் குழந்தைக்குத் தந்தை யார்?"

வழக்கறிஞர்:– "அந்தச் சந்தர்ப்பத்தில் மனுதார் ஒரு மாணவியாக இருந்தார். பாடசாலை முடிந்ததும் அவர் ஒரு நெசவு நிலையத்துக்குச் செல்வது வழக்கம். அந்தப் பாடசாலைக்குச் செல்லும் வழியில், மனுதாருக்கு மச்சான் முறையான சாமி என்பவரின் வீட்டைக் கடந்தே செல்வார். இந்த இருவரும் நெடு நாட்களாகத் தொடர்பு கொண்டுள்ளனர். இது அந்தக் கிராமத்தில் உள்ள பலருக்கு நன்ருகத் தெரியும். இதன் காரணமாக எதுவும் நடைபெற்றிருக்கக்கூடும். எனவே, மனுதார் சமர்ப்பித்துள்ள ஜீவனும்ச மனுவைத் தள்ளுபடி செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்"

இந்தக் கட்டத்தில் வழக்கு விசாரணையை நீதிபதி நாளைவரை ஒத்திவைத்தார். (க)

### "வாய், மூக்கிலிருந்து நுரையாகத் தள்ளியது"

"எனது அத்தை, ஒரு சிரட்டையில் தண்ணீர் எடுத்துக்கொண்டு. வீட்டுக்குப் பின்னல் சென்றதை நான் பார்த்தேன். பின்னர், போத்தலில் இருந்த ஏதோ ஒன்றை அதில் கலந்து குடித்தார். அவரது வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் நுரை நுரையாகத் தள்ளியது"

எஸ். பெலிநோனு என்ற 36 வயதுடைய பெண்ணின் மரணம் சம்பந்தமாக, மெதபலாத்த திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. எச். எம். சபாநாயக்க முன்னிலையில் நடைபெற்ற மரண விசாரணையின்போது சாட்சியமளித்த காலஞ்சென்றவரின் மருமகனை பன்னிரண்டு வயதுடைய என். எம். ஜி. கருணுரத்தின மேற்கண்டவாறு கூறினுர். அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"சம்பவம் நடைபெற்ற உடனே நான் ஓடிப்போய் எனது பெற்ருேரிடம் விஷயத்தைக் கூறினேன். ஸ்தலத்துக்கு நாங்கள் திரும்பி வந்து பார்த்தபொழுது, எங்கள் தோட்டத்தில் உள்ள இலுக்கு மரத்துக்குப் பக்கத்தில் எனது அத்தை படுத்திருந்தார். உடனே நாங்கள் ஆஸ்பத்திரிக்கு அவரை எடுத்துச் சென்ருேம். ஆனல் அவர் இறந்து விட்டார்."

என். எம். ஜி. சிங்கோ என்பவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"காலஞ்சென்றவர் கடந்த பத்து வருடங்களாக வலிப்பு நோயினுல் அவஸ்தைப்பட்டுவந்தார். அதன் வேதனையை அனுபவிக்க முடியாமல் அவர் வாழ்க்கையில் வெறுப்புற்றிருந்தார். தான் மிக விரைவில் தற்கொலை செய்து கொள்ளப்போவதாகவும் ஒருமுறை அவர் என்னிடம் கூறினர்.

"காலஞ்சென்றவர் எதையோ குடித்து விட்டதாக எனது மகன் கூறியதும் நாங்கள் உடனே ஸ்தலத்துக்கு ஓடிப்போனேம் காலஞ்சென்றவரிடம் பேச்சுக் கொடுத்த பொழுது, அவரால் பேச முடியவில்லை. அவர் படுத்திருந்த இடத்துக்கு அருகில் உள்ள மரத்தின் பக்கத்தில் ஒரு போத்தல் கிடந்தது. பின்னர் நாங்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்ருேம். ஆனல், அவர் மரணமாகி விட்டார். மரண விசாரணை அதிகாரி தற்கொலை என்று தீர்ப்பு வழங்கினர். (க)

### கப்பம் கேட்டதால் ஆறுமாத கடூழியம்

ஐந்து ரூபா கப்பம் கேட்டு ஒரு நபரைப் பயமுறுத்திய ஒரு நபருக்கு ஆறுமாத கடூழிய சிறைத் தண்டனையும், அதன்பின் ஒருவருட காலத்திற்கு அவர் பொலீஸார் கண்காணிப்பில் இருக்க வேண்டுமென்றும் தீர்ப்பு வழங்கினர். கொழும்பு மேலதிக மாஜிஸ்திரேட் திரு. நந்தா விஜயசேகர.

கிருண்ட்பாஸ் நாகலகம் வீதியில் உள்ள முனிசிபல் மார்க்கெட்டைச் சேர்ந்த "சிறியா" என்று அழைக்கப்படும் என். ஜி. சிறிசேன என்பவருக்கே இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (க)

### முனையுமில்லை முனைப்பும் இல்லை

இ. போ. ச.வின் புத்தமைப்பில் "பொயின்ட் கன்ட்ரோலர்களுக்கு", அதாவது முனைக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்களுக்கு இடமில்லை. எனவே அவர்கள் இருநூற்று எழுபது பேர் இன்னும் சில தினங்களில் வீடு செல்வதற்குச் சீட்டுப் பெறுவர். முனைக்கட்டுப்பாட்டுக்காரர்களின் கடமை சன நெருக்கடியான பஸ் தரிப்புகளில் பயணக்காரர்களை ஒழுங்காகக் "கியூ" வரிசையில் நிற்கச் செய்வதும், ஓடும் பஸ்கள் தரித்து இவர்களை ஏற்றிக் கொண்டு போகின்றனவா என்று கண்காணித்துக் கொள்வதுமாகும். ஆனல் அவர்கள் செய்யாத கடமை இஃதேயாகும். எனவே பஸ் பயணக்காரர்கள் எவரும் இவர்களையிட்டுத் துக்கப்பட மாட்டார்கள். புத்தமைப்பில் முனைகளே அகற்றப்படுகின்றன. எனவே முனைக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்கள் எதற்கு? முனையும் வேண்டாம், அதாவது வீண் சண்டையும் வேண்டாம், அதைக் கட்டுப்படுத்த உத்தியோகத்தர்களும் வேண்டாம்; முனைப்பில்லாமல் எல்லாக் கருமமும் நடைபெறட்டும்.

தந்தி

### நோயாளியின் பணத்தை அட்டெண்டன் திருடினுராம்

ராஜகிரியாவில் உள்ள சுகப்படுத்த முடியாத வியாதியஸ்தர்கள் (விக்டோரியா) விடுதியைச் சேர்ந்த வியாதியஸ்தரான எஸ். சண்முக சுந்தரம் என்பவரிடமிருந்து 240 ரூபா திருடியதாக, அதே விக்டோரியா விடுதியில் அட்டெண்டனுகக் கடமையாற்றும் எல். சோமபால என்பவர் மீது குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு கொழும்பு மேலதிக மாஜிஸ்திரேட் திரு. நந்தா விஜயசேகரா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

கடந்த மே மாதம் 10-ம் திகதி இந்தத் திருட்டுச் சம்பவம் நடைபெற்றதாகக் கூறிய வெலிக்கடை பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. சரத் பெரரலஸ்ஸ தொடர்ந்து சொன்னதாவது:—

"முறைப்பாட்டுக்காரர் கடந்த பத்து வருடங்களாக மேற்படி விடுதியில் வசித்து வருகிருர். பொம்மைகள் செய்து, அவற்றை விற்று அவர் இந்தப் பணத்தைச் சேமித்து வைத்திருந்தார். மே மாதம் 10-ம் திகதி அவர் அந்தப் பணத்தை தனது "கப்பர்ட் டிராயரில்" வைத்துப் பூட்டி சாவியைத் தலையணையின் கீழ் வைத்திருந்தார்.

"மறுநாள் பணத்தைப் பார்த்த பொழுது, அதைக் காணவில்லை. இதைப்பற்றி உடனே அவர் பொறுப்பாக உள்ள மேற்ரனிடம் அறிவித்தார். மற்ற வியாதியஸ்தர்களையும், இதர அட்டெண்டன்களையும் அந்த மேற்ரன் விசாரித்தார்.

"எதிரி, தலையணைக் கடியில் இருந்த சாவியை எடுத்து, கப்பட்டைத் திறந்ததைத் தாம் கண்டதாகச் சில வியாதியஸ்தர்கள் கூறினர். அதுபற்றி மேற்ரன் எதிரியை விசாரித்த பொழுது, தாம் பணத்தை எடுத்துச் செலவழித்து விட்டதாக எதிரி ஒத்துக் கொண்டார். பின்னர் முறைப்பாட்டுக்காரரிடம் எதிரி அந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டார்"

எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட மாஜிஸ்திரேட், ஒரு வருட காலத்துக்கு 400 ரூபா நன்னடத்தைப் பிணையில் செல்லுமாறு எதிரிக்கு உத்தர விட்டார். (க)

### தற்கொலை

கிணற்றடியில் துணி துவைத்துக் கொண்டிருந்த ஒரு இளம் பெண்ணை, ஒரு இளைஞன் பலாத்காரமாகக் கட்டியணைத்து முத்தமிட்டான். அதைக் கண்ட அந்தப் பெண்ணின் மாமனர், அந்த இளைஞனின் துர்ச்செயலைக் கண்டித்தார். அந்த இளைஞன் பெண்ணின் மாமனரைத் தாக்கியதாகவும் கூறப்படுகிறது. இதனல் வெட்கமடைந்த அந்த இளம் பெண், நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டாள். கேகாலைப் பகுதியில் இந்தச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. (க)

### கார் விபத்தில் எழுவருக்கு படுகாயம்

மடு யாத்திரை செய்து விட்டுத் திரும்பிய ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஏழு நபர்கள். மோட்டார் விபத்தொன்றில் சிக்கிப் படுகாயம் அடைந்த சம்பவம் ஒன்று, சாவகச்சேரி பொலீஸ் நிலையத்துக்கு அருகில் நடைபெற்றது.

பிரயாணிகளை ஏற்றிக் கொண்டு வந்த இந்தக் கார், வீதியைவிட்டு விலகி விபத்துக்கு உள்ளானதாகச் சொல்லப்படுகிறது. விபத்தினல் காயமடைந்த ஏழு நபர்களும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (க)


### நன்றி கூறுகின்ருேம்

இறைவன் திருவருளால் கடந்த ஜூன் 21, 22-ம் திகதிகளில் நடந்தேறிய எங்களது திருமணத்திற்கும் மறு வீடழைப்பிலும் கலந்து கொண்டு சிறப்பித்த உறவினர்களுக்கும். நண்பர்களுக்கும் மேற்படி வைபவங்கள் சிறப்புற நடைபெற மனப்பூர்வமான உதவியும் ஒத்துழைப்பும் தந்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

அநேகருக்கு தெரிவிக்கமுடியாத நிலைமை ஏற்பட்டுவிட்டமைக்காக வருந்துகிருேம்; மன்னிக்க வேண்டுகிருேம்.

அஸ்ஸலாமு அலைக்கும்.

ஏ. ஸி. எம். ஹுசைன் பாரூக்
தாஜில் பரீதா
225/7, ஆட்டுப்பட்டித் தெரு.
கொழும்பு – 13.

"தந்தி
சிறு விளம்பரங்கள்

### விற்பனைக்கு

கட்டிட பொருட்கள்

இறக்குமதி செய்யப்பட்ட முதல் தரமான போட்லான்ட் சீமெந்து 11-75 வீதம் பெற்றுக் கொள்ளலாம். பிரின்ஸ்லீ டிரேடிங் கம்பனி, 414/21, கே. சிறில் சி. பெரேரா மாவத்த, கொழும்பு–13.
R. 66829


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நித்திரை செய்து கொண்டிருந்த பொழுது

# என்னைக் கட்டியணைத்து அவர் முத்தமிட்டார்

## ஜீவனும்ச வழக்கில் இளம் பெண் சாட்சி

"நான் அறையில் நித்திரை செய்து கொண்டிருந்த பொழுது, அதிகாலையில் யாரோ என்னைக் கட்டியணைத்து முத்தமிடவே, திடுக்கிட்டு விழித்துப் பார்த்தேன். என் அருகில் விஜயரத்தின இருந்தார்- நான் அவரைத் தள்ளி விட்டேன். ஆனால், அவர் என்னைக் காதலிப்பதாகக் கூறினார். இப்படித்தான் எங்கள் காதல் விவகாரம் ஆரம்பமாகியது"

கொழும்பு தெற்கு மேலதிக மாஜிஸ்திரேட் திரு. ஜோர்ஜ் அத்துருப்பான முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட ஜீவனும்ச வழக்கொன்றில் சாட்சியமளித்த மனுதார் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த வழக்கில், அசரப்புலி ஹேமாவதி என்ற 24 வயதுடைய பெண், தனக்கும் தனது குழந்தை நிலாந்திக்கும் தனது கணவரான விஜயரத்தின ரணவீர என்பவரிடமிருந்து ஜீவனும்சம் பெற்றுத்தரும்படி கோரி மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

மனுதாரான ஹேமாவதி தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"எங்கள் திருமணத்துக்கு இரண்டு வருடங்களுக்கு முன் விஜயரத்தின எனது வீட்டில் வசித்து வந்தார். எனது தகப்பனார் வழியில் அவர் எனது உறவினர். ஆறு ஆண்டுகளாக அவரை எனக்குத் தெரியும்.

1965–ம் ஆண்டு அவர் என் வீட்டில் வந்து வசிக்கத் தொடங்கினார்- இலங்கைப் பீங்கான் கூட்டுத்தாபனத்தில் தொழிலாளர் மேற்பார்வையாளராகக் கடமையாற்றுவதாக அவர் கூறினார். சில மாதங்கள் கழிந்த பின் ஒரு நாள் நான் அறையில் நித்திரை செய்து கொண்டிருந்தபொழுது அங்கு வந்த விஜயரத்தின என்னைக் கட்டியணைத்து முத்தமிட்டார். நான் அவரைத் தள்ளிவிட்டேன். ஆனால், அவர் என்னைக் காதலிப்பதாகவும், என்னைத் திருமணம் செய்து கொள்வதாகவும் என் தலையில் அடித்துச் சத்தியம் செய்தார்.

"நடந்த சம்பவத்தை யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று அவர் கேட்டுக் கொண்டார். நானும் அதற்கு இணங்கினேன். அதற்குப் பிறகு, சந்தர்ப்பம் வாய்த்தபோதெல்லாம் நாங்கள் இருவரும் எனது அறையில் வைத்து உடலுறவு கொண்டோம்.

"ஒருநாள் நானும் விஜயரத்தினவும் கட்டிலில் படுத்திருந்த பொழுது எனது தந்தை அதைக் கண்டு விட்டார். பிறகு எனது பெற்றோர், எதிர் மனுதாருக்கு என்னைத் திருமணம் செய்து கொடுத்தனர். ஆனால், இப்பொழுது அவர் என்னையும், அவர் மூலம் எனக்குப் பிறந்த குழந்தையையும் புறக்கணித்து விட்டார்.

"இப்பொழுது ரூப்பா" என்ற ஒரு பெண்ணுடன் கள்ளத் தொடர்பு கொண்டுள்ள அவர், அந்தப் பெண்ணையே தனது ஆசை நாயகியாக வைத்திருக்கிறார்."

இந்தக் கட்டத்தில் நீதிபதி வழக்கு விசாரணையை ஜூலை மாதம் 26–ம் திகதிவரை ஒத்தி வைத்தார். (க)

## சாக்கடையில் சிசுவின் சடலம்

சுமார் இரண்டு மாதங்கள் நிரம்பிய ஒரு இனந்தெரியாத சிசுவின் சடலம், பண்டாரவளை பொது மார்க்கெட்டுக்குப் பின்புறம் உள்ள கக்கூசு சாக்கடையில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது.

பெரும் கூட்டம் கூடிச் சிசுவின் சடலத்தைப் பார்த்தது. ஆயினும் அந்தச் சிசு இனம் கண்டு பிடிக்கப் படவில்லை. (க)

## இரு இளம் பெண்களை அக்கினி அரவணைத்தது

இரு இளம் பெண்களை அக்கினி அரவணைத்துக் கொண்டது! இந்தச் சம்பவம் பதுளை நகரில் நடைபெற்று இருக்கிறது. பதினெட்டு வயதுடைய கே. செல்லம்மாவும், பதின்மூன்று வயதுடைய டி. இந்திராணியுமே அக்கினியால் அரவணைக்கப்பட்டவர்களாவர்.

வெளிமடைப் பகுதியைச் சேர்ந்த மொரகொல்ல என்ற கிராமத்தில் வசித்துவந்த செல்லம்மாவின் மரணம் பற்றி, பதுளை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. பி. பி. இரத்னயக்கா விசாரணை நடத்தினார். செல்லம்மாவின் தந்தையான சாமிநாதன் கதிரவேல் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"சம்பவம் நடைபெற்ற தினம் காலஞ்சென்ற எனது மகளான செல்லம்மாவுடனும், மற்றொரு மகளான லீலாவதியுடனும் நான் வீட்டில் இருந்தேன். எனது மனைவி, ஒரு உறவினரைப் பார்ப்பதற்காக கலகந்தவத்தைக்குப் போயிருந்தார்.

"சமையற் கட்டில் சமைத்துக் கொண்டிருந்த செல்லம்மா, திடீரென்று அபயக்குரல் எழுப்பவே, நான் ஸ்தலத்துக்கு ஓடிப் போனேன். அங்கே என் மகளின் உடையில் நெருப்புப் பற்றி எரிவதைக் கண்டேன். நெருப்பை அணைத்துவிட்டு அவரை உடனடியாக பதுளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றேன் அங்கே அனுமதிக்கப்பட்ட சற்று நேரத்தில் அவர் மரணமானார். இந்த மரணம் சம்பந்தமாக நான் யாரையும் சந்தேகிக்கவில்லை."

பதுளையைச் சேர்ந்த டி. இந்திராணியின் மரணம் சம்பந்தமாக, திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. பி. பி. இரத்னயக்கா விசாரணை நடத்துகையில் சாட்சியமளித்த காலஞ்சென்றவரின் தாயாரான தெய்வானையம்மாள் (வயது 32) கூறியதாவது:—

"வீட்டுக்கு வெளியே நான் துணி துவைத்துக் கொண்டிருந்தேன். திடீரென்று சமையற் கட்டிலிருந்து கூக்குரல் கேட்டது. அங்கே நான் ஓடிப்போய்ப் பார்த்த பொழுது, என் மகள்மீது நெருப்புப் பற்றி எரிவதைக் கண்டேன். மிகுந்த பிரயாசைப்பட்டு நெருப்பை அணைத்துவிட்டு, நான் அவளை பதுளைப் பெரிய ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றேன். அங்கே அவள் மரணமானாள். அவளது மரணம் பற்றி நான் யாரையும் சந்தேகிப்பதற்கு இடமில்லை"

இரண்டு மரண விசாரணைகளையும் நடத்திய திரு. பி. பி. இரத்னயக்கா ஜே. பி., விபத்தினால் மரணம் சம்பவித்ததாகத் தீர்ப்பளித்தார். (க)

## கத்தி முனையில் கட்டழகி கற்பழிக்கப்பட்டாள்?

கத்திமுனையில் வைத்து, கட்டழகுப் பெண் ஒருத்தி ஆறு முரடர்களால் கற்பழிக்கப்பட்ட சம்பவம் ஒன்று ரத்மலானையில் நடைபெற்று இருக்கிறது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஒரு ஆணுடன் ரத்மலானை பஸ் நிலையத்தில் நின்று கொண்டிருந்த இளம் பெண் ஒருத்தியை பலாத்காரமாகக் கடத்தி சென்ற ஆறுபேர், அவளைக் கத்தியைக் காட்டிப் பயமுறுத்திக் கற்பழித்ததாகக் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒரு நபரை, கொழும்பு தெற்கு மாஜிஸ்திரேட் திரு. கொலின் மெண்டிஸ் முன்னிலையில், கல்கிசைப் பொலீசார் ஆஜர் செய்தனர்.

எச். ஏ. கருணாவதி என்ற பெண் தனது நண்பர் ஒருவருடன் ஒரு நண்பரைச் சந்திப்பதற்காக ரத்மலானைக்குப் போனதாகவும், அப்பொழுது இந்தச் சம்பவம் நிகழ்ந்ததாகவும் பொலீசார் நீதிமன்றத்தில் கூறினர்.

இப்பொழுது அந்தப் பெண் கொழும்பு தெற்கு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார்.

சந்தேக நபரை 500 ரூபா பிணையில் செல்ல நீதிபதி அனுமதித்தார். (க)

## இந்தியா போவதற்குள் இயமன் முந்தி விட்டான்!

அறுபது வயதுடைய முதியவர் ஒருவர், இங்கிருந்து வெளியேறி, தனது தாய்நாடான இந்தியாவுக்குச் சென்று, இந்திய மண்ணில் மரணிக்க விரும்பினார். ஆனால், அவர் இலங்கையை விட்டுப் புறப்படுவதற்கு ஒருநாள் இருக்கையில், இயமன் முந்திக் கொண்டான்.

பதுளை, ஒலியாமண்டித் தோட்டத்தைச் சேர்ந்தவர் பி. முத்துக் கருப்பன். வயது அறுபது "துங்ஹிந்த" நீர்வீழ்ச்சியில் சுகமாகக் குளித்து- விட்டுத் திரும்பிய அவர் சடுதியாக மரணமானார்-

சொரணத்தோட்டை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். எம். சுதுபண்டா மரண விசாரணை நடத்தினார். காலஞ்சென்றவரின் மகளான நாற்பது வயதுடைய ஆர். நாகம்மா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"எனக்கு ஒரு வயது நடக்கும பொழுதே எனது தாயார் இறந்து விட்டார். அதற்குப் பிறகு எனது தந்தை மறுமணம் செய்து கொள்ளவில்லை. காலஞ்சென்ற எனது தந்தை தெய்வ பக்தி மிகுந்தவர். துங்ஹிந்தைப் பிள்ளையாரை அவர் வணங்கத் தவறுவதே இல்லை.

"இலங்கையில் சாவதைவிட இந்தியாவுக்குச் சென்று அங்கு தான் சாகவேண்டும் என்றும், அதையே அவர் விரும்புவதாகவும் எனது தந்தை அடிக்கடி என்னிடம் சொல்வது உண்டு. அண்மையில் அவர் இந்தியாவுக்குப் போவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். எனது தந்தை பணத்தை வங்கியில் செலுத்தி விட்டதுடன், பாஸ்போர்ட் முதலானவற்றையும் எடுத்து விட்டார்- ஜூலை மாதம் 6–ம் திகதி அவர் இந்தியாவுக்குப் புறப்படவும் ஆயத்தமாக இருந்தார்.

"சம்பவம் நடைபெற்ற தினம், துங்ஹிந்தைக்குக் குளிக்கச் சென்ற எனது தந்தை, திரும்பி வந்து துங்ஹிந்த பிள்ளையாரை வணங்கினார். அதைத் தொடர்ந்து, நாற்காலியில் சென்று உட்கார்ந்த அவர், சடுதியாக மரணமானார்.

பொலீஸ் கான்ஸ்டபிள் குமாரதிஸ்ஸ சாட்சியமளித்ததைத் தொடர்ந்து இயற்கையான மரணம் என்று மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார். (க)

## போத்தல் விளக்குக்கு பருவப் பெண் பலி

போத்தல் விளக்கு ஒன்றைப் பற்றவைக்க முயலும் பொழுது, தவறுதலாக உடையில் தீப்பற்றிக் கொள்ளவே, கிராமத்துப் பருவப் பெண் ஒருத்தி உடல் கருகி, துடி துடித்து மரணமானாள்.

சிலாபம் பொலீஸ் வட்டாரத்தைச் சேர்ந்த அம்பக்கந்தவில மெதவத்த என்ற இடத்தில் இந்தப் பரிதாப சம்பவம் நிகழ்ந்துள்ளது. காத்தமுத்து யோகம்மா என்ற 16 வயதுப் பருவப் பெண்ணே இந்தப் பரிதாப மரணத்துக்கு உ[illegible] வார்.

நீர்கொழும்பு [illegible] டீர் மரண விசாரணை அதிகாரி முன்னிலையில் சாட்சியமளித்த காலஞ்சென்ற பெண்ணின் தந்தையான கே. ஏ. காத்தமுத்து என்ற 65 வயது முதியவர் கூறியதாவது:—

"எனது ஏழு பிள்ளைகளுள் காலஞ்சென்ற யோகம்மா, நான்காவது பிள்ளையாவார். சம்பவம் நடைபெற்ற தினத்தன்று, எனது மகள், வீட்டு ஹாலில் வைத்து போத்தல் விளக்கொன்றைப் பற்றவைக்க முயன்றார். திடீரென்று, "எனது பாவாடையில் நெருப்பு பற்றிக் கொண்டதே! ஐயோ என்னைக் காப்பாற்றுங்களேன்!" என்று அவள் அலறும் சப்தம் கேட்டது. நானும் எனது மனைவியும் ஸ்தலத்துக்கு ஓடிப்போனோம். நெருப்பை அணைத்துவிட்டு, மகளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றோம். அங்கே வைத்து அவள் மரணமானாள். இந்த மரணம் சம்பந்தமாக நான் யாரையும் சந்தேகிக்கவில்லை."

மரண விசாரணையின் இறுதியில், விபத்தினால் மரணம் சம்பவித்ததாகத் தீர்ப்பளிக்கப்பட்டது. (க)


## கோபால் பல்பொடி

பற்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் விற்கப்படுகிறது

**S. P. S. ஜெயம் அன் கோ.**

மதுரை - கொழும்பு.

விற்குமிடம்:-

34, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

தபால் பெட்டி: 1298.

தொலைபேசி எண்: 26584





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூரில் உற்பத்தியாகும்

# ஷேர்ட் தயாரிப்பாளரை அமைச்சர் சந்திப்பார்

## விலைகளைக்குறைப்பதுபற்றி அவர்களுடன் ஆராய்வார்

உள்ளூர் ஷேர்ட் தயாரிப்பாளர்களை, கைத்தொழில், விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சர் திரு. டி. பி. சுபசிங்கா இம்மாதம் 10-ம் திகதி சந்தித்து, உள்ளூர் ஷேர்ட்களின் விலைகளை உடனடியாகக் குறைப்பது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறார்.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு விலை. தரக் கட்டுப்பாடு பற்றி ஆராய்வதற்கென விசேஷ பிரிவு ஒன்று அமைக்கப்படுகிறது.

கைத்தொழில், விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறது.

விலைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட வேண்டிய உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் பட்டியல் ஒன்று ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது.

தேவையான தகவல்களைத் திரட்டுவதற்காக, கைத்தொழில் அபிவிருத்திச் சபையினது உதவியையும் அமைச்சு கோரியுள்ளது.

இதற்கிடையில், உள்ளூர் ஷேர்ட் தயாரிப்பாளர்களை கைத்தொழில், விஞ்ஞான ஆராய்ச்சி அமைச்சர் திரு. டி. பி. சுபசிங்கா இம்மாதம் பத்தாம் திகதி சந்திக்க இருக்கிறார்.

உள்ளூர் தயாரிப்பு ஷேர்ட்டுகளின் விலைகளை உடனடியாகக் குறைப்பது குறித்து அமைச்சர் ஷேர்ட் தயாரிப்பாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார். (க)

## விசாரணை

இராணுவத்தைச் சேர்ந்த ஒரு உயர் அதிகாரி, பொதுத் தேர்தலுக்கு முன் நடந்து கொண்ட விதம் பற்றி தற்போது இராணுவ அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டம் உட்பட, பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள்பற்றி இராணுவ வீரர்கள் மத்தியில் இந்த உயர் அதிகாரி உரை நிகழ்த்தினாராம். (க)

## இராணுவ அதிகாரிகள் பத்து பேர் இடமாற்றம்

இராணுவ பீடத்தின் பல பிரிவுகளைச் சேர்ந்த பத்து உயர்தர அதிகாரிகள் இம்மாதம் 15-ம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளனர்.

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சேபால அட்டிகலே நேற்று முன்தினம் இந்த இடமாற்றங்கள் சம்பந்தமான உத்தரவுகளைப் பிறப்பித்தார்.

பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் உத்தரவின் பேரில் இராணுவத்தை முற்றாக மாற்றி அமைப்பதன் முதல் படியே இந்த இடமாற்றங்கள் என்று தெரிகிறது.

கோப்ரல் ஈ. டி. டி. இலட். அபேசேக்கர கள்ளக் குடியேற்றத் தடுப்பு பிரிவுக்கும், கோப்ரல் பி. டி. இராமநாயக்க பனுகொடை இராணுவ முகாமுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளனர்.

கோப்ரல்கள் வீரசேன ராஜபக்ஸ, டி. ஜே. டி. எஸ். விக்கிரமநாயக்க, சி. டி. தல்தேரா, மேஜர்கள் எச். வி. அத்துகோரல, டி. பி. பெரேரா, எஸ். பி. மெயனதெனிய, கோப்ரல் பி.ஐ. வீரசிங்க, மேஜர் சி. ஏ. எம். என். சில்வா ஆகியோரும் இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளனர்.

மற்றும் பல சாதாரண இராணுவ அதிகாரிகளும் இடமாற்றம் செய்யப்பட்டு உள்ளனர். (க)

## பிரதமருக்கு பாதுகாப்பு அளிக்க விசேஷ ராணுவம்

பிரதம மந்திரி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கென விசேஷ இராணுவப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

இலங்கைப் பிரதமர் ஒருவருக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காக விசேஷ இராணுவப் பிரிவு நிறுவப்படுவது இதுவே முதற் தடவையாகும்.

இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சேபால அட்டிகலேயின் உத்தரவுக்கு இணங்க, இந்த விசேஷ பிரிவு ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது.

இந்த விசேஷ பிரிவின் தலைவராக மேஜர் ஈ. சி. பெர்னாண்டோ கடமையாற்றுவார்.

முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் மேஜர் பெர்னாண்டோ கட்டாய லீவில் அனுப்பப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் செல்லும் இடங்களுக்கெல்லாம், இந்த விசேஷ இராணுவப் பிரிவு அவருடன் செல்லும். அத்துடன் பிரதமர் தங்கியிருக்கும் இடங்களில் பாதுகாப்புப் பந்தோபஸ்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

விசேஷ இராணுவப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளபோதிலும், தற்பொழுது பிரதமருக்கு அளிக்கப்பட்டு வரும் பொலீஸ் பாதுகாப்பும் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்று நம்பப்படுகிறது. (க)

## அரசியல் அமைப்பு சபைக் கூட்டம் 19-ம் திகதி

இலங்கையின் புதிய அரசியல் அமைப்புச் சட்டத்தை உருவாக்கும் சபையின் முதலாவது கூட்டம் இம்மாதம் 19-ம் திகதி கூடுகிறது. இத்தகவலை அரசியல் அமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா நேற்றுக் கூட்டிய விசேஷ பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார். (க)

## இருபத்தைந்து ஆடுகள் தீ விபத்தில் மாண்டன

காத்தான்குடி, ஜூலை 7

பட்டிருப்புத் தொகுதியைச் சேர்ந்த 39-ம் கொலனியில் காத்தான்குடியை அடுத்துள்ள காங்கயனோடை வாசியான தம்பிலெவ்வை என்பவருக்குச் சொந்தமான ஆட்டுப் பண்ணையில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக 25-க்கு மேற்பட்ட ஆடுகள் தீயில் வெந்து மாண்டுள்ளன.

இதுபற்றிக் கூறப்படுவதாவது:- வழமையாகத் தனது ஆட்டுக் காலைக்கு அவர் மாலை நேரத்தில் புகை வைப்பது வழக்கம். வழமை போல் புகை வைத்துவிட்டு கடைக்குத் திரும்பிய தம்பிலெவ்வை ஆட்டுக்காலைப் பக்கம் தீ எழும்புவதைக் கண்டார்.

உடனே விரைந்தவர், ஆடுகள் எல்லாம் தீயின் வெப்பம் தாங்கமுடியாமல் கதறுவதைக் கண்டார். உடனே தன்னால் முடிந்த அளவு தாலையைப் பிரித்தெறிந்தார். அப்படி முயற்சி செய்தும் இருபத்தைந்து ஆடுகள் வெந்து மடிந்துள்ளன. (க-135)

## வடவியட்நாம் வீரர்கள் பதினைந்து பேர் பலியாகினர்

சைகோன், ஜூலை 7

தென் வியட்நாமின் மேற்கு ஹியூ நகரில் நடைபெற்ற சண்டை ஒன்றில் அமெரிக்கத் துருப்பினர் 15 வட வியட்நாம் வீரர்களைக் கொன்றனர்.

இங்கு நடைபெற்ற சண்டையின் பின்னர் காயம் அடைந்த 39 வட வியட்நாமியர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அமெரிக்கா தரப்பில் 19 பேர் காயம் அடைந்தனர்.

ஹியூவில் இருந்து 67 மைல் வட மேற்கே நடைபெற்ற மற்றொரு சண்டையில் 13 வட வியட்நாம் வீரர்கள் கொல்லப்பட்டனர்.

அதே சமயம் தென் வியட்நாமின் வட பகுதியில் தென் வியட்நாம் துருப்புகள் கடும் தாக்குதல் நடத்தி உள்ளனர்.

இந்தத் தாக்குதல்களின்போது ஒன்பது கெரில்லாக்கள் கொல்லப்பட்டனர்.

சைகோனில் இருந்து 30 மைல் வட கிழக்கே நடைபெற்ற மற்றொரு சண்டையில் ஒன்பது வியட்காங்கியர் கொல்லப்பட்டனர்- க)

## கலாசார நிதி ஆரம்பிக்கப்படும்

மத்திய கலாசார நிதி ஒன்றை ஆரம்பிப்பதற்கு கலாசார அமைச்சு ஏற்பாடு செய்கிறது.

பொதுவான தேவைகளுக்கும் குறித்த சில தேவைகளுக்கும் இந்த நிதி பயன்படுத்தப்படும். சொந்தத்தில் கலாசார ஸ்தாபனங்களை ஆரம்பிப்பதற்கு விரும்பும் கலைஞர்களுக்குத் தேவைப்பட்டால் பண உதவி செய்வதும் இந்த நிதியின் முக்கிய நோக்கமாக இருக்கும்.

கலாசார நிகழ்ச்சிகளின் மூலம் இதற்கு நிதி திரட்டப்படும். இதற்கான நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும்படி கலாசார அமைச்சர் திரு. எஸ். எஸ். குலத்திலக்க கலாசாரத் திணைக்களத்துக்கு உத்தரவிட்டுள்ளார். (க)


## ஆண் பெண் இருபாலருக்கும்

தீய கனவுகள் காண்பது, கனவுகளின் மூலம் இந்திரிய ஸ்கலிதம், நரம்புத் தளர்ச்சி, ஞாபக சக்தி குறைவு, சிறுநீரில் சீனி, மா என்பன போதல், உடற் பலவீனம், மாதர்களின் மாதவிடாய் தோஷம் என்பனவற்றிற்கு கைகண்ட மருந்து. யந்திரமும் பாவிப்பதற்கு மருந்து வகையும் ஒழுங்கு செய்து தருவோம். நோயை எழுதி விபரங்களுக்கு எழுதவும்.

அரசாங்க அனுமதி பெற்ற

**நீலன் கந்தசாமி,**

குப்த வித்தியாயதனய,

லக்சல கட்டிடம், நிட்டம்புவ.


## குருக்களுக்கு தடை உத்தரவு

இறை வழிபாட்டுக்காக மாவிட்டபுரம் ஆலயத்துக்குள் செல்லும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைத் தடுத்து நிறுத்தக் கூடாது என்று. யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி ஜனுப் ஐ. எம். இஸ்மாயில். மாவிட்டபுரம் ஆதீன கர்த்தாவான துரைசாமிக் குருக்களுக்கும் ஆலய உற்சவ கால நிர்வாகியான திரு. சி. சுந்தரலிங்கத்துக்கும் தடை உத்தரவு பிறப்பித்து இருக்கிறார். இதற்கிடையில், இன்று ஆரம்பமாக இருந்த மாவிட்டபுரம் ஆலய வருடாந்த உற்சவம் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. (க)

## இறக்குமதி கோட்டா டி.ஆர்.பி.காரருக்குவிற்பனை

இலங்கை வர்த்தகர்கள் பலர், தங்கள் இறக்குமதிக் கோட்டாவை தற்காலிக வாசபெர்மிட் உடைய வர்த்தகர்களுக்கு விற்று உள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இம்முறைப்பாடு பற்றி உடன் விசாரணை நடத்தும்படி வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக மந்திரி திரு. ரி. பி. இலங்கரத்ன தனது அமைச்சு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இறக்குமதி – ஏற்றுமதி திணைக்களத்தால் அண்மையில் உப உணவுப் பொருள் இறக்குமதிக் கோட்டா வழங்கப்பட்டது. தனியார் துறை வர்த்தகர்களுக்கும் இந்தக் கோட்டா வழங்கப்பட்டது.

தற்காலிக வாச பெர்மிட் வியாபாரிகளுக்குத் தங்கள் கோட்டாவை விற்றுள்ள வியாபாரிகள் கண்டு பிடிக்கப்பட்டால், அந்த வியாபாரிகளின் லைசென்சுகள் உடன் ரத்துச் செய்யப்படும் என்று திரு. இலங்கரத்ன சொன்னார்.

இவ்வருடத்தின் இறுதி ஆறு மாத காலத்துக்கு மட்டும் முக்கிய உணவுப் பொருள் இறக்குமதிக்கு ரூபா 16 கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது. (ல)


இப் பத்திரிகையை அச்சிட்டவர்: சுயாதீனப் பத்திரிகா சமாஜ, 5, குணசேன மாவத்தை, கொழும்பு — 12 (இலங்கை). வெளியீட்டு திகதி 8 ஜூலை 1970.

Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org